بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**ஐயர்லாந்திலுள்ள மர்யம் பள்ளிவாசலில்** 26.09.14 **அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 26, September 2014 (Tamil)**

**பள்ளிவாயில்கள் அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கான இடமே தவிர எந்தவொரு குழப்பம், சோதனை நடைபெறும் இடமன்று. இந்த பள்ளிவாயில்கள் எல்லா காலங்களிலும் உள்ள மனிதர்களுக்கு தனது படைத்து காத்தோம்பும் பண்பை வெளிப்படுத்திய அந்த ரப்புல் ஆலமீன் ஆகிய இறைவனை வணக்குவதற்காக உருவாக்கப்படுகின்றன.**

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் சூரா தவ்பாவின் 18-ஆவது வசனத்தை ஓதினார்கள்.பிறகு அதன் பொருளைக் கூறினார்கள். பொருள்:

‘‘ அல்லாஹ்வின் மீதும், மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு, தொழுகைகளை நிலைநாட்டி, ஸகாத் கொடுத்து அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் அஞ்சாதவர் மட்டுமே அல்லாஹ்வின் பள்ளிவாயில்களை நிரப்புகின்றார். எனவே இவர்கள் வெற்றியின் பக்கம் விரைவில் கொண்டு செல்லப்படுவர்.’’ (திருக்குர்ஆன் 9:18)

**அல்லாஹ் இன்று நமக்கு அயர்லாந்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் முதல் பள்ளிவாயிலில் ஜுமுஆ தொழும் நல்வாய்ப்பை வழங்கி இருக்கிறான் - அல்ஹம்து லில்லாஹ்.** அல்லாஹ் இந்த பள்ளிவாயிலை கட்டியதையும், அதனை நிலைநாட்டுவதையும் எல்லாவகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. இது சிறிய பள்ளிவாயில்தான். எனினும் அறிவிப்பது என்னவென்றால், முஹம்மதிய்ய மஸீஹை ஏற்றுக் கொள்பவர்கள் இங்கிருந்து ஓர் இறைவனின் ஓர் இறைமையை ஐவேளை அறிவிப்பு செய்வார்கள். மேலும் இங்கு வந்து ஓர் இறைவனை ஐவேளை வணங்குவார்கள். பள்ளிவாயில்கள் அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கான இடமே தவிர எந்தவொரு குழப்பம், சோதனை நடைபெறும் இடமன்று. இந்த பள்ளிவாயில்கள் எல்லா காலங்களிலும் உள்ள மனிதர்களுக்கு படைத்து காத்தோம்பும் தனது பண்பை வெளிப்படுத்திய அந்த ரப்புல் ஆலமீன் ஆகிய இறைவனை வணங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளன. அந்த இறைவன் சென்ற காலத்திலும் எல்லா சமுதாயங்களின் பௌதீக, ஆன்மீக முன்னேற்றத்திற்காக, தனது படைத்து காத்தோம்பும் பண்பை வெளிப்படுத்தினான்; இன்றும் தனது படைத்து காத்தோம்பும் பண்பினால் உலகிற்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறான். அவனது படைத்து காத்தோம்பும் பண்பு எந்தவொரு சிறப்பான சமுதாயத்திற்காகவும் வரையறுக்கப்பட்டதன்று. மாறாக, அனைத்து உலகங்களுக்கும், சமுதாயங்களுக்கும் ஆகும்.

எனவே இந்த வகையில் முஹம்மதிய்ய மஸீஹை ஏற்றுக் கொள்பவர்களின் பள்ளிவாயில்கள் அறிவிக்கக் கூடிய விஷயம் என்னவென்றால், ஆன்மீகமான படைத்து காத்தோம்பும் இறை பண்பு பற்றிய ஞானத்தை அறிய வேண்டுமென்றால், முஹம்மதிய்ய மஸீஹை ஏற்றுக் கொள்பவர்களுக்குத்தான் உண்மையான முறையில் இது பற்றிய ஞானம் இருக்கிறது. நாங்கள் இந்தப் பள்ளிவாயிலைக் கட்டுகிறோம் என்றால், உலகத்தின் குழப்பத்தை அகற்றுவதற்காக இஸ்லாம் எடுத்து வைக்கும் அன்பு, நேசம், சாந்தி, சமாதானம் ஆகியவற்றின் அழகிய போதனையைப் பற்றி சிந்தியுங்கள் என்பதை எடுத்துரைப்பதற்காகக் கட்டுகிறோம். உலகத்திற்கு அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவை தேவைப்படுகிறதே தவிர, போர், வாள், பீரங்கி ஆகியவற்றின் தேவை இல்லை என்பதை அறிவிப்பதற்காக இந்தப் பள்ளிவாயில் இருக்கிறது. நாங்கள் கட்டுகின்ற இந்த பள்ளிவாயில்கள், இங்கு வருகின்றவரின் உள்ளம் எல்லாவிதமான அநீதியிழைத்தல்,

கொடுமையிழைத்தல் ஆகிய எண்ணங்களிலிருந்து தூய்மையானதாக இருக்கிறது என்பதை பறைசாற்றுகின்றன. இந்த பள்ளிவாயிலுக்கு வருகின்றவர்கள் மற்றவர்களின் உரிமைகளை நிறைவேற்றுவதற்காக எல்லாவிதமான தியாகங்களையும் செய்பவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாகும். நம்மவர்களின் உரிமைகளை நிறைவேற்றுவதில் கருணையுடன் நடந்து கொள்வதைப் போன்று, பகைவர்களின் பகைமையும் எங்களை நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியவாறு அவர்களுக்கான உரிமைகளை நிறைவேற்றுவதிலிருந்து எங்களை தடுக்காது என்பதற்கான தலையாய அடையாளமாகும். நாங்கள் கட்டுகின்ற இந்தப் பள்ளிவாயில், மார்க்க சுதந்திரத்திற்கு அதிகமாக கொடி பிடிப்பது இஸ்லாம்தான் என்பதைப் பறைசாற்றுவதாகும். எங்கள் பள்ளிவாயிகளின் வாசல்கள் அனைவருக்காகவும் திறந்திருக்கின்றன. ஓர் இறைவனை வணங்கும் ஒவ்வொருக்கும் – அவர் முஸ்லிமா அல்லது முஸ்லிம் அல்லாதவரா என்பதைப் பார்க்காமல் இந்த பள்ளிவாயிலில் இறைவணக்கம் செய்வதற்கு எந்தத் தடையுமில்லை. நமது பள்ளிவாயிலில் வரும் ஒவ்வோர் அஹ்மதியும் தெரிவிப்பது என்னவென்றால், **திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப எல்லா மார்க்கங்களின் வணக்கத்தலங்களைப் பாதுகாப்பது ஒவ்வொரு முஸ்லிமின் பொறுப்பும் கடமையுமாகும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவது தங்களின் பள்ளிவாயிலைப் பாதுகாப்பது போன்றே அவசியமானதாகும்.** இறைநம்பிக்கை கொண்டவரிடம் அந்த இறைநம்பிக்கையின் ஒரு பகுதி நாட்டுடன் நன்றியுணர்வுடன் இருப்பதுமாகும். எனவே இறைநம்பிக்கை கொண்ட ஒருவர் தனது நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் நன்றியுள்ளவராக இருக்காதவரை அவர் இறைநம்பிக்கை கொண்டவராக இருக்க முடியாது.

சுருக்கமாக, பள்ளிவாயில்களுடன் உண்மையான முறையில் தொடர்பு கொண்டவர்களிடம் பல விஷயங்களை இஸ்லாம் எடுத்து வைக்கின்றது. **அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களின் உரிமைகள் சரியான முறையில் நிறைவேறும்போதுதான் பள்ளிவாயில்களின் உரிமைகள் நிறைவேறுகின்றன.** இந்த எல்லா செயல்களையும் செய்யும் கட்டளையை அல்லாஹ் திருக்குர்ஆனில் வழங்கி இருக்கிறான். இந்த எல்லா செயல்களையும் செய்யுமாறு நமது எஜமானரும் பின்பற்றப்படத் தகுந்தவருமான ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமக்கு மீண்டும் மீண்டும் கவனமூட்டி இருக்கிறார்கள். மேலும் தமது செயலால், அழகிய முன்மாதிரியால் அல்லாஹ்வின் உரிமைகளையும், அடியார்களின் உரிமைகளையும் நிறைவேற்றி இருக்கிறார்கள். மனிதத்துவத்தின் கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காகவும், அன்பு, சாந்தி, சமாதானம், அமைதி ஆகியவற்றை நிலைநாட்டுவதற்காகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது முன்மாதிரியை நிலைநாட்டினார்கள். இது வெறும் வாயால் சொல்லும் விஷயமல்ல. மாறாக. இதற்கு வரலாறு சாட்சி பகர்கிறது. ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கிறித்தவர்களுக்கு அவர்களின் வணக்கத்திற்கான நேரத்தில் தனது மஸ்ஜிதே நபவியில் இறைவணக்கம் செய்வதற்கான அனுமதி வழங்கினார்கள். இதுவே உண்மையான இஸ்லாமிய போதனையாகும். இதைத்தான் அன்னாரின் உண்மைத் தொண்டர், உண்மை அன்பர் (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ் ஸலாம்) அவர்கள் நாம் கடைபிடிக்குமாறு கட்டளையிட்டார்கள்.

இதுதான் உண்மையான இஸ்லாமிய போதனை மற்றும் செயலாகும். அதன் சில உதாரணங்களை நான் எடுத்து வைத்திருக்கிறேன். இவற்றை செய்யுமாறும் பரப்புமாறும் கட்டளையிட்டவாறு நம்மிடம் நம்பிக்கை வைத்தவாறு காலத்தின் இமாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ''இந்த சிந்தனையுடன் நீங்கள் எங்கு பள்ளிவாயிலைக் கட்டினாலும் இஸ்லாத்தை அறிமுகப்படுத்துகின்ற, தப்லீக் செய்கின்ற வழிகளை திறந்து கொண்டே செல்வீர்கள். மக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் கவனம் ஏற்படும். அதன் அழகிய போதனை அவர்களை தன் பக்கம் ஈர்த்து விடும். மேலும் உங்கள் எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டே செல்லும்.''

ஆக, இந்த நோக்கத்திற்காகத்தான் நாம் நமது பள்ளிவாயிகளைக் கட்ட வேண்டும்; (இந்த நோக்கத்திற்காகவே) நாம் கட்டுகிறோம். இன்று உலகம் மீடியாவில் இந்த போதனையைப் பார்த்துதான் அதைப் பற்றி அறிந்து நம் பக்கம் கவனம் செலுத்துகிறது. ஒரு பக்கம் தீவிரவாதிகள் மட்டுமே இருக்கிறார்கள். அவர்கள் கொலை கொள்ளையில் ஈடுபட்டிருக்கிறார்கள். மறு பக்கம் ஒரு ஜமாஅத் அன்பு, நேசம், சமாதானம், அமைதிக்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை ஒரு சாதாரண மனிதரிலிருந்து, மிகப் பெரிய தலைவர்கள், அரசியல் தலைவர்கள் பார்க்கும்போது – ஒரு பக்கம் பெயர் தாங்கி முஸ்லிம்களின் பள்ளிவாயிகள் இருக்கின்றன; அங்கு அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரில் தூற்றல்களும் அசுத்தங்களால் நிரம்பிய வார்த்தைகளால் நிரம்பிய உணர்ச்சிகளும் வெளிப்படுத்தப்படுகின்றன. மறுபக்கம் அமைதி, சமாதானம் பற்றிய பேச்சு மட்டுமே

பேசப்படுகின்றது. எல்லாரிடத்தும் அன்பு; எவரித்தும் இல்லை வெறுப்பு என்ற முழக்கம் இடப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது நிச்சயமாக இந்த விஷயங்கள் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றன. இந்த இரண்டு விதமான முஸ்லிம்களுக்கு மத்தியில் இவ்வளவு வித்தியாசம் ஏன் என மக்கள் ஆய்வு செய்யத் தொடங்குகிறார்கள். பிறகு இந்த ஆய்வு இன்றைய நவீன தொலைத் தொடர்புகள் அல்லது இணைய தளம் ஆகியவை மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கான முயற்சிகளுக்கு வழிகோலுகிறது. நேற்று முன் தினம் டப்லின் பாராளுமன்றத்திற்கு செல்ல நேர்ந்தது. **பாராளுமன்றத்தின் சில உறுப்பினர்களையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களில் ஒருவர், அஹ்மதிய்யா ஜமாஅத் மனிதனுடைய கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காகவும், அமைதியை நிலைநாட்டுவதற்காகவும் எவ்வாறு முயற்சி செய்கிறதோ அதனை மற்ற முஸ்லிம்களிடம் காண முடியவில்லை என்று கூறினார். மேலும் இந்த விஷயத்தை நான் மிக ஆழமாக சென்று ஆராய்ந்து கூறுகிறேன் என்றும் அவர் கூறினார். இப்போது இந்த அன்பும் நேசமும் எனது நகரமாகிய டல்பனிலும் பரவுவதற்காக அஹ்மதிய்யா ஜமாஅத் தனது பள்ளிவாயிலை இங்கேயும் சீக்கிரம் கட்ட வேண்டும் என நான் ஆசைப்படுகிறேன் எனக் கூறினார்.**

நான் ஆரம்பத்தில் ஓதிய (9:18) வசனத்தில் அல்லாஹ் பள்ளிவாயில்களை நிரப்புபவர்களின் சிறப்புப் பண்புகளை எடுத்துக் கூறியிருக்கிறான். இந்த வசனத்தின் விரிவாக்கம் கஅபத்துல்லாஹ்விலிருந்து ஆரம்பமாகி, இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள சிறந்த பண்புகளைத் தாங்கிய மக்களைக் கொண்டு நிரம்புகின்ற எல்லா பள்ளிவாயில் வரையும் சென்றடைந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் இறைநம்பிக்கை கொண்டவர்களாவர். அவர்களைப் பற்றி ஓரிடத்தில் அல்லாஹ், ***அஷத்து ஹுப்பன் லில்லாஹ்*** எனக் கூறியிருக்கிறான். அதாவது நம்பிக்கை கொண்டவர்களின் அன்பு அதிகமாக அல்லாஹ்வின் மீதே இருக்கின்றது. (2:166காண்க). மற்ற எந்த உலக அன்பும் அவர்கள் மீது மிகைத்து விடுவதில்லை. அவர்கள் அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்காக தமது வாழ்வை கழிக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். உலக லாபத்தைப் பெறுவதற்காக அல்லாஹ்வின் அன்பை விட்டு விடுபவர்களாக இருக்க மாட்டார்கள். அல்லாஹ்வின் மீது கொண்ட அன்பு எதிர்பார்ப்பது என்னவென்றால், அவனது கட்டளைகளின்படி செயல்பட வேண்டும்; அவனை வணங்க வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''உள்ளார்ந்த அன்பில் அல்லாஹ் அல்லாதவற்றை இணையாக்குவதை இறைவனின் தன்மான உணர்வு ஒருபோதும் விரும்புவதில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நாம் அன்பில் மற்றவர்களை அவனுக்கு இணையாக்காமல் இருப்பதன் மூலமாகவே நமக்கு அனைத்தையும் விட அன்பாக இருக்கும் ஈமான் பாதுகாப்பாக இருக்க முடியும்.''

ஆக, இது மிகவும் சிந்திக்க வேண்டிய விஷயமாகும். எனவே இந்த தகுதியை ஒவ்வொருவரும் ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. நமது ஆய்வே நமது நிலைமைகளைப் பற்றி எடுத்துக் கூற முடியும். திருக்குர்ஆனில் எண்ணற்ற கட்டளைகள் இருக்கின்றன. அவற்றைப் பற்றி ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 700 கட்டளைகள் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். எவர் அதன்படி செயல்படவில்லையோ அவர் என்னை விட்டும் விலகிச் செல்கிறார்; என்னுடன் உள்ள தொடர்பை துண்டிக்கிறார் என்றும் கூறினார்கள். எனவே நாம் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படும்போதுதான் அல்லாஹ்வின் மீதுள்ள நமது ஈமான் முழுமை அடையும். அப்படிப்படவர்களைப் பற்றி அல்லாஹ், அவர்கள் ஈமான் கொண்டவர்கள் என வாதம் செய்பவர்கள் மட்டுமல்ல. மாறாக அவர்களுக்கு ஒவ்வொரு நொடிப்பொழுதும் அல்லாஹ்வின் உதவியும் ஆதரவுகளும் தென்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வின் பேரருள் என்னவென்றால், அவன் இந்த ஜமாஅத்திற்கு எத்தகைய நம்பிக்கை கொண்டவர்களை வழங்கி இருக்கிறான் என்றால் அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் என்று வாதம் மட்டும் செய்வதில்லை. மாறாக, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவது அவர்களின் நோக்கமாக இருக்கிறது. அஹ்மதிய்யா ஜமாஅத், ஜமாஅத் அளவில் முன்னேற்றத்தின் படித்தரங்களைக் கடந்து சென்றுகொண்டிருப்பதற்கான ரகசியம் இதுதான். பள்ளிவாயிலுக்குப் பிறகு தப்லீகிற்கான புதிய வழிகள் திறந்து கொண்டே செல்லும். இதுதான் நமது அநுபவமாகும். இதற்காக ஒவ்வோர் அஹ்மதியும் மார்க்க, அறிவுப் பூர்வமான பதில் வழங்குவதற்காக, அவர் அறிவுப்பூர்வமாகவும் ஆயத்தமக இருக்க வேண்டும்; செயல் நிலைமைகளையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் பார்க்க

விரும்பிய அந்த தகுதிக்கேற்ப மாற்றவும் வேண்டும். அந்த தகுதி என்ன என்பதை நான் விளக்கிக் கூறியிருக்கிறேன். அதாவது திருக்குர் ஆனின் எல்லா கட்டளைகளின்படி செயல்பட வேண்டும். இங்குள்ளவர்கள் தாமாகவே உங்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இஸ்லாம் உயிருள்ள மார்க்கம் என்பதற்கான சான்று என்னவென்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வந்து விட்டார். அவர் எங்களை இறைவனுடன் இணைத்தார். அந்த இறைவன் எங்களின் துஆக்களை கேட்கின்றான்; ஒப்புக்கொள்ளவும் செய்கிறான். அவன் தனது வாக்குறுதிகளுக்கேற்ப தனது அடையாளங்களையும் காட்டுகின்றான். எனவே உலகம் எஞ்சியிருப்பது அந்த மஸீஹை ஏற்றுக் கொள்வதில்தான் இருக்கிறது. இந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மடியில் வருவதன் மூலமே அல்லாஹ்வுடன் உயிருள்ள தொடர்பு ஏற்பட முடியும் என்பதை நீங்கள் இவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

ஆனால் நாம் இந்த விஷயங்களை எவ்வித தயக்கமுமின்றி கூற முடியுமா? அல்லது கூறட்டுமா? கூற வேண்டாமா? என நாம் சற்று நின்று யோசிக்க வேண்டியது வருமா? மற்றவர் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான (அடையாளமாக) என்னிடம் சவால் விட்டால் அதனை ஏற்றுக் கொள்ளும் நிலைமையில் நான் இருக்கின்றேனா? எனக்கு இறைவனுடன் அந்த அளவுக்கு தொடர்பு இருக்கிறதா? **நான் இறைவனுடைய அன்பையும், அவனைப் பற்றிய அச்சத்தையும் எனது உள்ளத்தில் வைத்தவாறு எனது வாழ்வை அவன் கூறிய கட்டளைகளுக்கேற்ப அமைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்கிறேனா? இல்லையென்றால், ஓர் அஹ்மதி என்ற முறையில் எனது பொறுப்புகளைப் பற்றி உணராமல், அவற்றைக் நிறைவேற்றாமல் நான் எப்படி உலகத்தை அழைக்க முடியும்?** நீங்கள் எந்த மஸீஹை ஏற்றுக் கொள்வதன் பக்கம் என்னை பேராசையூட்டி அழைக்கின்றீர்களோ அவர் உங்களிடம் என்ன மாறுதல்களை உருவாக்கினார் என மக்கள் என்னிடம் கேட்க மாட்டர்களா என சிந்திக்க வேண்டும். உங்களுக்கு இறைவனுடன் எந்த அளவுக்கு தொடர்பு இருக்கிறது? நீங்கள் என்னை இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்துவதாக பேரசையூட்டி வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொள்ளும்படி என்னை அழைக்கிறீர்கள் என அவர்கள் என்னிடம் கேட்க மாட்டார்களா? என சிந்திக்க வேண்டும். வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்ட உங்களின் செயல்கள் உங்களின் கூற்றுப்படி திருக்குர்ஆனின் போதனைகளின்படி இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால், நீங்கள் எங்களை எந்த ஆன்மீக செயல் அளவிலான புரட்சியின் பக்கம் அழைக்கிறீர்கள்? என்று கேட்க மாட்டார்களா? நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படியே நாங்களும் இருக்கிறோம். எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் என்ன வித்தியாசம் இருக்கிறது? என்று கேட்க மாட்டார்களா?எனவே அஹ்மதி, அஹ்மதி என்ற அளவில் பார்க்கப்படுகின்றபோது அவருடைய பொறுப்புகள் மிக அதிகமாகி விடுகின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர் அஹ்மதியாக மட்டும் இருப்பதில்லை. மாறாக, அவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பிரதிநிதியாகி விடுகின்றார். எனவேதான் அவர்கள், **நம்மைச் சார்ந்தவராக இருந்து கொண்டு நம்மை அவப்பெயருக்கு உள்ளாக்காதீர்கள் எனக் கூறினார்கள்.**

எனவே எந்தவோர் அஹ்மதியின் தீய செயல் அவருடன் மட்டும் முடிந்து விடுவதில்லை. மாறாக, அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வரை சென்றடைகிறது. இது மிகவும் முக்கியமான விஷயமாகும். இதனை ஒவ்வோர் அஹ்மதியும் முன்னிறுத்த வேண்டும். இவையெல்லாம் இருந்தால் பிறகு ஓவ்வோர் அஹ்மதியும் அஹ்மதிய்யத்தின் தூதுவராக மாறி விடுவார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பிரதிநிதியாகி விடுவீர்கள். தப்லீகின் உரிமையை நிறைவேற்றுபவர்களாகி விடுவீர்கள். உலகத்திலுள்ளவர்களுக்கு உலகத்தையும் மறுமையையும் சரியாக்குபவராக மாறிவிடுவீர்கள். அல்லாஹ்வின் அருள்களை ஈர்ப்பவர்களாக ஆகிவிடுவீர்கள். எனவே இதனைப் பெறுவதற்காக நாம் பள்ளிவாயிலின் உரிமையை நிறைவேற்ற வேண்டிய தேவை இருக்கிறது. நமது ஐவேளை தொழுகைகளை ஜமாஅத்துடன் அழகிய முறையில் நிறைவேற்ற வேண்டிய தேவை இருக்கிறது. கடமையானவற்றுடன் நஃபிலானவற்றின் மூலமாகவும் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. ஒவ்வோர் அஹ்மதி ஆணும்,பெண்ணும் தனது பொறுப்பை உணர வேண்டிய தேவை இருக்கிறது.

**நாம் இந்தப் பள்ளிவாயிலுக்கு மஸ்ஜிதே மர்யம் என பெயர் வைத்துள்ளோம்** என நாம் மிக ஆர்வத்துடன் இங்குள்ளவர்களுக்குக் கூறுகிறோம். ஏனெனில் (இங்குள்ள அயர்லாந்து) மக்கள் ஹஸ்ரத் மர்யம் (அலைஹஸ் ஸலாஹ்) அவர்களுக்கு மிகவும் கண்ணியமளிக்கின்றனர். நாம் இங்குள்ளவர்களிடம், ஈஸாவின் தாயாக இருந்த காரணத்தால் மர்யம் உங்களுக்கும் அன்பிற்குரியவராவார். ஆனால் எங்களுக்கு அந்த மர்யம், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு தாயார் என்ற காரணத்தினால் மட்டும் அன்பிற்குரியவரல்லர். மாறாக, அல்லாஹ் அவருடைய நன்மை மற்றும் இறையச்சத்தின் தரத்தைப் பார்த்து அவர் மீது அன்புப் பார்வையிட்டான். மேலும் நம்பிக்கை

கொண்டவர்களிடம், நீங்கள் மர்யம் போன்ற சிறப்புப் பண்புகளை உருவாக்குங்கள் எனக் கூறினான். மர்யம் தமது கற்பைக் காத்துக் கொண்டார். மேலும் இதனை அவர் இறையன்பு, இறையச்சத்தின் காரணமாக காத்துக் கொண்டார். அவர் இறைவனுக்கு முழுமையாகக் கட்டுப்படக் கூடியவராக விளங்கினார். அவர் நேர்மையிலும், உண்மையிலும் நிலைபெறக் கூடியவராக இருந்தார். எனவே ஒவ்வோர் உண்மையான நம்பிக்கை கொண்ட ஆணும் பெண்ணும் இறைநம்பிக்கைக்கான இந்த பண்புகளை மேற்கொள்ள வேண்டும் என அல்லாஹ் கட்டளை இட்டுள்ளான். **எனவே நான் இங்குள்ள அஹ்மதி ஆணுக்கும், பெண்ணுக்கும் கூறுவேன்: இங்குள்ள மக்கள் ஹஸ்ரத் மர்யம் அவர்களுக்கு கண்ணியமளிக்கிறார்கள்; ஆனால் அவர்களின் பண்புகளை மேற்கொள்ள முயற்சி செய்யவில்லை என்றால், இது இந்த மக்களின் பலவீனமாகும். ஆனால் ஓர் உண்மையான முஸ்லிம் ஆணும் பெண்ணும் ஹஸ்ரத் மர்யமைப் போன்று அல்லாஹ்வின் உண்மையான கட்டுப்படும் அடியாராக மாறி அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும்.**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''இது அல்லாஹ் நற்பேறு பெற்றவர்களுக்காக உருவாக்கிய இறை நெருக்க(ம் பெறுவ)த்திற்கான ஒன்றாகும். இதிலிருந்து பயன் பெறுபவர்களே அருளுக்குரியவர்கள் ஆவர். என்னுடன் தொடர்பை ஏற்படுத்தி இருக்கின்ற நீங்கள் நாம் பெற வேண்டியதைப் பெற்று விட்டோம் என ஆணவம் கொள்ளாதீர்கள். தனது கடுமையான மறுப்பு மற்றும் அவமானம் செய்தல் ஆகியவற்றின் மூலமாக இறைவனை கோபத்தற்குள்ளாக்கியவர்களை விட நீங்கள் நெருக்கமான நற்பேற்றில் இருக்கிறீர்கள் என்பது உண்மைதான். நீங்கள் நல்லெண்ணம் கொண்டு இறை கோபத்திலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்வது பற்றி கவலைப்பட்டீர்கள் என்பதும் உண்மையாகும். **ஆனால் உண்மை என்னவென்றால், அல்லாஹ் நிரந்தர வாழ்வுக்காக உருவாக்கியிருக்கும் அந்த நீரூற்றின் பக்கம் இப்போது நீங்கள் வந்து விட்டீர்கள்; ஆயினும் நீர் அருந்துவது எஞ்சியிருக்கிறது.** எனவே இறைவன் உங்களுக்கு நீர் அருந்தத் தருவதற்காக அல்லாஹ்வின் அருள், கருணைக்கான நல்வாய்ப்பை வேண்டுங்கள். ஏனெனில் இறைவன் இல்லாமல் ஒன்றும் நடப்பதில்லை. இறைவன்தான் நல்வாய்ப்பை வழங்குகிறான். **எவர் இந்த நீரூற்றிலிருந்து அருந்துவாரோ அவர் நாசமாக மாட்டார் என்பதை நான் நிச்சயமாக அறிவேன்.** ஏனெனில் இந்த நீர் வாழ்வை வழங்குகிறது. அழிவிலிருந்து காப்பாற்றுகிறது. ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கிறது. இந்த நீரூற்றிலிருந்து நீர் அருந்துவதற்கு என்ன வழிமுறை? இறைவன் உங்கள் மீது சுமத்தியிருக்கின்ற இரண்டு உரிமைகளை சரி செய்யுங்கள். முழுமையாக நிறைவேற்றுங்கள். அவற்றில் ஒன்று, இறைவனுக்குரிய உரிமை. இன்னொன்று படைப்பினங்களுக்கிரிய உரிமை.''

அல்லாஹ் நமக்கு எப்போதும் இந்த உரிமையை நிலைநாட்டும் நல்வாய்ப்பை வழங்குவானாக. இந்த நீரூற்றிலிருந்து அதிகமதிகமாக அருள்களைப் பெற்றுக் கொண்டே செல்வோமாக. பிறகு இந்த அருளிலிருந்து உலகிற்கு அருளை வழங்குபவர்களாவோமாக.

இந்த பள்ளிவாயிலின் விபரத்தையும் கூறுகிறேன். 2010 செப்டம்பரில் இதன் அடிக்கலை நான் நாட்டினேன். நிலத்தின் மொத்த பரப்பளவு 2400 சதுர அடியாகும். ஏறக்குறைய முக்கால் ஏக்கர். பள்ளிவாயில் கட்டப்பட்ட பகுதி 217 சதுர அடியாகும். இந்த இடம் 2009 - ல் 5,15,000 யூரோ தொகையில் வாங்கப்பட்டது. பிறகு இதைக் கட்டுவதற்கு ஏறக்குறைய 11 இலட்சம் யூரோ தொகை செலவானது. இதில் மொத்தம் 200 பேர் தொழலாம். இந்த பள்ளிவாயிலுடன் இரு அலுவலகங்களும் உள்ளன. 17 வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம் உள்ளது. மேலும் இங்கு அருகிலேயே குதிரைப் பந்தயம் நடக்கும் களம் இருக்கிறது. இந்த குதிரைப் பந்தய நிகழ்ச்சியில் மிகவும் முக்கியமானவர்கள் வருகை தருகின்றனர். அநேகமாக 40 ஆயிரம் பேர் வருகை தருகின்றனர். அங்கிருந்து பள்ளிவாயிலின் தோற்றம் மிக அழகாகத் தென்படுகிறது. இந்த வகையிலும் பள்ளிவாயிலைப் பற்றிய அறிமுகம் அதிகமாகும். இந்த இடத்தில் நாள்தோறும் நூற்றுக்கணக்கானவர்கள் கடந்து செல்கின்றனர். கால்வே (Galway) விமான நிலையமும் 10 நிமிட தூரத்தில் இருக்கிறது. அல்லாஹ் இந்தப் பள்ளிவாயிலை அருளுக்குரியதாக ஆக்குவானாக. இங்குள்ள மக்களுக்கு இந்த பள்ளிவாயிலுக்கான உரிமையை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

**Summarized By: Majlis Ansarullah Bharath**

**Translated By: *O.M.Muzzammil Ahmad* For *Tamil* Desk**

**Published By Nazarat Nashr-O-Isha'ath Qadian, 143 516, Punjab**